**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் நாள் சனிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 9/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 14/2015**

1.முத்துவிஜயன்
2.மயில்வாகனன் ..... மனுதார்கள்/வாதிகள்

..எதிர்..

1.செல்லம் (எ) செல்லச்சாமி (**இறப்பு**)
2.பஞ்சவர்ணம் **(இறப்பு)**
3.ஹரிதா
4.பாண்டித்துரை (**இறப்பு**) ...... எதிர்மனுதார்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள்

5.மருதுபாண்டியன்
6.சின்னத்துரை
7.பெரியசாமி ...... Proposed எதிர்மனுதார்கள் / Proposed 5 முதல் 7 பிரதிவாதிகள்

8.உதயராணி
9.வினோத்குமார்
10.விக்னேஷ்வரன் ...... Proposed எதிர்மனுதார்கள் / Proposed 8 முதல் 10 பிரதிவாதிகள்

11.சத்தியா
12.சார்பதிவாளர், மானாமதுரை
13.மாவட்ட ஆட்சியர், சிவகங்கை ...... Proposed எதிர்மனுதார்கள் / Proposed 11 முதல் 13 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 02.02.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 3, 5 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.SPT.சேதுராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளநிலையில், 11ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.லிங்கேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 12, 13 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

1. மனுதாரர்கள் தரப்பில் சிபிசி ஆர்டர் 1 ரூல் 10(2) மற்றும் பிரிவு 151ன் படி மனுவில் கண்ட 11 முதல் 13 புரபோஸ்டு எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் 11 முதல் 13 பிரதிவாதிகளாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2) மனுவின் சுருக்கம்:**

தாவா சொத்தின் ஒரு பகுதியை 3ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கிய புரபோஸ்டு 11ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து கொண்டு தாவா வழக்கை மேல் நடத்த வேண்டும் என்று தனக்கு சட்ட அறிவுரை கிடைக்கப்பெற்றதாகவும், அதேபோல் பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து வேறு பதிவுகள் ஏதும் மேற்கொள்ளக்கூடாது என்பதற்காக புரபோஸ்டு 12, 13 எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து கொண்டு தாவா வழக்கை நடத்த வேண்டும் என்று தனக்கு சட்ட அறிவுரை கிடைக்கப்பெற்றதாகவும், எனவே புரபோஸ்டு 11 முதல் 13 எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 11ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

மனுவில் கூறியுள்ள விசயங்களை மனுதாரர்களே நிரூபிக்க கடமைபட்டவராவார்கள் என்றும், தாவா சொத்தானது ஆதியில் பெரியசாமி, சின்னத்துரை, சின்னத்தம்பி ஆகியோர்கள் பெயரில் செட்டில்மெண்ட் நிலப்பதிவேட்டில் தாக்கலாகியிருந்து, அதன்பிறகு ஏற்பட்ட நிலஉடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் 1ம் பிரதிவாதியான செல்லம் (எ) செல்லச்சாமி பெயருக்கு பட்டா தாக்கலாகி அவர் அனுபவம் செய்து வந்து, செல்லச்சாமியிடமிருந்து 3ம் பிரதிவாதியான ஹரிதா என்பவர் மானாமதுரை சார்பதிவகத்தில் 13.08.2012ம் தேதி கிரையம் பெற்று அனுபவம் செய்துவந்து, தனக்கு ஆவண எண்.351/2025 என்ற எண்ணில் 31.01.2025ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் படி கிரையம் கொடுத்து தனித்த உடமையில் அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்கள் தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், எனவே தாவா மனு தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) 12, 13 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

தாவா மனுவில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர பிறயாவற்றையும் மனுதாரர்களே நிரூபிக்க கடமைபட்டவராவார்கள் என்றும், தாவா சொத்து சம்பந்தமாக பத்திரப்பதிவு எதுவும் ஏற்படுத்தக்கூடாது என்று தங்களுக்கு எதிராக நீதிமன்ற தடையாணை உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், தாவா சொத்து சம்பந்தமாக பத்திர பதிவுகள் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தபோதும், தங்களையும் தரப்பினராக சேர்த்து பரிகாரம் கோரவில்லை என்றும், தற்போது காலம் கடந்து தங்களை உள்ளடக்கி தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து பரிகாரம் கோருவதற்கு தாவா மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், மேலும் கூடுதல் சங்கதிகள் மற்றும் ஆவணங்களை ஏற்படுத்த தங்களையும் கட்டுப்படுத்தி பரிகாரம் கோருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், எனவே தாவா மனு தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5) இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையதாகவே உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் வழக்கு விசாரணையின் எந்த கட்டத்திலும் நியாயமான நீதியின் நலனுக்கு உட்பட்டு அவசிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்கலாம்.

மேலும் 3ம் பிரதிவாதி தாவா சொத்தின் ஒரு பகுதியை இந்த புரபோஸ்டு 11ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 31.01.2025ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே அவரையும் தரப்பினராக சேர்த்து விசாரித்தால் தான் இவ்வழக்கின் உண்மைநிலை தெரியவரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இம்மனு அனுமதிக்காமல் போனால் தரப்பினர்களிடையே வீண்குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மேலும் வழக்குகள் பெருகுவதை (For Avoiding the Multiplicity of Proceedings) தடுப்பதற்காகவும், நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

"Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 பிப்ரவரி மாதம் 7ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.02.07 17:26:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.02.07 17:26:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

**ORDER**

**I.A.No. 9/2025**
**in**
**OS. No. 14/2015**

**Dated: 07.02.2026**